பரசுராமன் சரித்திரம்.

ஸ்ரீமஹாவிஷ்ணு எடுத்த தசாவதாரங்களில் ஒன்று பரசுராம அவதாரம், இவ்வவதாரம் எடுப்பதற்குக் காரணம் சிலர் க்ஷத்திரியருடைய கர்வத்தைப் பங்கஞ்செய்ய வென்பர், சிலர் க்ஷத்திரிய பூண்டை வேர்களைய வென்பர். இங்ஙனங் கூறும் கூற்றுபுராணேதிகாசங்களுக்கும் நியாயத்திற்கும் அனுபவத்திற்கும் ஒத்ததாவென்பதைப் பரியாலோசிக்கும் பொருட்டு, வடமொழி தென்மொழியில் வரைந்துள்ள வியாச மஹாபாரதம், விஷ்ணு புராணம், இராமாயணம், கேரள மஹாத்மியம், கேரள உற்பத்தி முதலிய பல மேற்கோள்களினின்று பரசுராமன் சரித்திரத்தை வரையலாயிற்று.

பிரம்மாவின் குமாரன் பிருகு, பிருகுவின் குமாரன் சியாவணன், சியாவணன் என்பவன் மனுவின் குமாரத்தியாகிய ஆருஷியாவென்பவளை மணம் புரிந்தான். இவர்களுக்குப் புத்திரன் ஆர்வன். ஆர்வன் குமாரன் ரிச்சிகன். ரிச்சிகன் குமார்ன் ஜமதக்கினி. ஜமதக்கினியின் ஐந்தாவது குமாரன் பரசுராமன். இதன்விபரம் வனபர்வம் தீர்த்தயாத்திரைச்சருக்கம் 114 - வது அத்தியாயத்திற் காண்க.

கன்னியகுப்ஜம் என்கிற நாட்டிற்கதிபதியாகிய காதியென்னும் இராஜன் உலகத்திற் கீர்த்திப்பெற்று வாழ்ந்தான். ஆனால் கொஞ்சகாலம் பொறுத்துத் தனது இராஜதானியை விட்டு வனத்திற்கேகி அங்கு தனது பத்தினியோடு வாசஞ்செய்கையில், தேவகன்னிகைக்குச் சமதியான ஓர் புத்திரி தனக்குப் பிறந்தாள். பிருகுவின் குமாரனாகிய ரிச்சிகாவென்பவன் அக்கன்னிகையை மணம்புரிவதற்குக் காதியிராஜனைக் கேட்டான். அதற்குக் காதி சொன்னது எங்கள் வம்சத்திற்குள்ளாக ஓர் வழக்கமிருக்கின்றது. அது தொன்றுதொட்டு என் முன்னோர்களால் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. ஓ பிராமணோத்தமா! எங்கள் குலகன்னிகையை விவாகஞ் செய்ய விரும்பிய மணமகன் சாம்பல் நிறமும் காதுகளில் ஒன்று கறுத்தநிறமுடைய ஆயிரம் போர்ப்பரிகளைப் பரியமாகக் கொடுக்கவேண்டும். இப்பரியத்தைத் தங்களைப்போலொத்த தபோதனரிடம் எதிர்பார்த்தலுங் கூடாது. தபோசிரேஷ்டராகிய உமக்கு எனது கன்னிகையைக் கொடேனென்று மறுக்கநானேவல்லவனல்லன் என்றனன். இதனைக்கேட்ட அம்மகருஷி

உனது இஷ்டப்பிரகாரமே ஆயிரமஸ்வங்களை யளிக்கின்றேன், உமது கன்னிகையை எனக்கு மணம் புரிவிப்பாயாக என்றனர். பின்னர் இப்பிராமணன் வருணபகவானிடஞ் சென்று முற்கூறிய சின்னங்களையுடையகுதிரைகளைத்தனக்குக்கொடுக்கும்படி வேண்டினன். உடனே வருணபகவான் கங்காநதியினின்று அத்தகைய ஆயிரம் கலினமாக்களைப் போர்ப்பரிகளைக் கொடுத்தான். இதன் பின்னர் கன்னிய குப்ஜமென்னும் நகரில் காதிராஜனுடைய புத்திரியாகிய சத்தியவதிக்கும் ரிச்சிகாவுக்கும் கலியாணம் நடந்தது. இவ்விதமாய்க் கலியாணம் நிறைவேறிய பின்னர் ரிச்சிகாவின் பிதாவாகிய பிருகு என்பவர் தனது புத்திரனையும் மருமகளையும் பார்க்கவந்தார். வந்தவருக்கு மருமகள் வேண்டிய உபசாரங்கள் செய்து அவரை வணங்கிநின்ற காலையில் அவர் தனது மருமகளைப் பார்த்து பெண்கள்நாயகமே! உனக்கு என்னவரம் வேண்டும் அதைக்கேள் என்றார். அதற்கு அவள் தனக்கும் தன் தாய்க்கும் புத்திரானுக்கிரகம் செய்யவேண்டுமென மொழிந்தனள். அதற்கு அவர் அங்ஙனமே யாகுகவெனக்கூறி, நீங்கள் இருவரும் ருது காலத்தில் ஸ்நானஞ்செய்து நீ அத்திவிருட்சத்தையும் உன் தாய் மற்றோர் விருட்சத்தையும் தனித்தனி தழுவவேண்டும்; நான் உங்களுக்கு இரண்டுபாத்திரங்களில் க்ஷீரான்னம் செய்துவைத்திருக்கிறேன். அதில் மகத்தான சஞ்சீவியின் இரசத்தையும் பிழிந்திருக்கிறேன், அதை நீங்களிருவரும் ஜாக்கிரதையோடு அருந்த வேண்டுமென்று ஆக்கியாபித்து அவ்வருந்தபசி மறைந்தனர். ஆனால் இவ்விருவருக்கும் நியமித்த அன்னத்தையும் மரங்களையும் மாற்றிக்கொண்டனர். கொஞ்சநாள் கழிந்தபின்னர் பிருகுமுனி தன் ஆசிரமத்தைவிட்டு தன் மருமகளிடம் வந்து அவ்விடம் நேர்ந்த மாறுபாட்டை ஞானதிருஷ்டியால் அறிந்துகொண்டனர். அறிந்துகொண்டு தன் மருமகளாகிய சத்தியவதியை நோக்கி, ஓ அழகிய நங்காய்! நீயுனது தாயின்மோசத்தால் உனக்கு நியமித்த அன்னத்தையும் விருட்சத்தையும்விட்டு உனது தாயுக்கு நியமித்தவைகளைக் கைக்கொண்டாய், ஆகையால் உனக்குப் பிறக்கும் புத்திரன் குலத்தில் பிராமணனுயிருந்தும் செய்கையில் க்ஷத்திரிய தருமத்தை அனுசரித்திருப்பான். உனது தாயுக்குப் பிறக்கும் பிள்ளை விஸ்வாமித்திரன். அவன் குலத்தில் க்ஷத்திரியனுயிருந்தும் கருமத்தால் பிராமணனுவான். அவனுடைய வல்லமையோ அதி சிரேஷ்டமாயிருக்கும். அவன் நீதிமான்களின் நியாயத்தை யனுசரித்து நடப்பான் என, இதைக்கேட்ட சத்தியவதி எனது குமாரன் அங்ஙனம் கருமத்தால் க்ஷத்திரியனுகாதிருக்கக் கடாட்சிக்க வேண்டுமெனப் பன்முறையும் பிரார்த்தித்தனள். இப்போது என் கருவில் இருக்கும் எனது குமாரன் இக்குணம் அமைந்தவனுயிராமல் அவனுடைய புத்திரனுகிய எனது பவுத்திரன் தங்கள்

நாட்டில் ஐந்து ஏரிகளாக்கினன். இவ்வேரியினின்று பிருகு முத லிய தன் மூதாதைகளுக்கு ஆகுதி கொடுத்தனன். அப்போது ரிச் சிகாவென்பவன் பிரசன்னமாய்ப் பரசுராமனுக்கு வேண்டிய வரங் களைக் கொடுத்துவிட்டு ஏகினன். பிறகு மகேந்திரகிரியிற் சென்று அங்கே விசேஷ தவமும் சடங்குகளும் செய்துகொண்டிருந்தான்.

இவன் மகேந்திரபருவதத்திலிருக்குங்காலையில் அனேக ரிஷி கள் இவனைப் பார்ப்பதுண்டு. அப்போது தன் தாயையும், க்ஷத்தி ரியர்களையுங் கொன்ற பாப நிவாரணத்திற்காக என்னசெய்யவே ண்டுமென்று கேட்டான். அதற்கு அவர்கள் 20-கஜம் அகலமும் 18-கஜம் உயரமுமான ஒரு பலிபீடம் பொன்னுற் செய்து அதை யும் தான் ஜெயித்த நாடுகளையும் காசிபரிஷிக்குத் தானஞ்செய்யும் படி சொன்னார்கள். அதேபிரகாரம் ஒருபலிபீடஞ்செய்து அதைக் காசிபரிஷிக்குத் தானஞ் செய்துவிட்டான். இதைக் காசிபரிஷி பெற்றுப் பிராமணர்களுக்குத் துண்டு துண்டாகத் தானமாய்க் கொடுத்துவிட்டார். அங்ஙனம் தானம் பெற்ற பிராமணர்கள் கா ண்டவாயனர் என்று அழைக்கப்படுவார்கள்.

திரேதாயுகத்தில் விஷ்ணு அம்சமாக 6-வது அவதாரம் புரி ந்த பரசுராமன் வில்வித்தை முதலிய க்ஷத்திரிய தருமங்களில் மகா ல்லமைசாலியாகி, விஷ்ணு தன் மூதாதையாகிய ரிச்சிகாவுக்குக் காடுத்த வில்லையும் சிவபெருமானல் கொடுக்கப்பட்ட பரசை ம் பெற்று மகேந்திரகிரியில் வாழ்ந்துகொண்டிருக்குங்காலையில் ரீராமர் சீதையை மணம்புரிவதற்கு மிதிலைக்குச் சென்று அங் ுள்ள வில்லை வளைத்துச் சீதையை மணம்புரிந்து திரும்புகையில், பரசுராமன் எதிரே வந்து மறித்துச் சொல்லியதாவது, கம்பரா மாயணம் பரசுராமப்படலம் 33-34-வது கவிகள்.

மூவெழு முறைமை பாரின் முடியுடை வேந்தை யெல்லா
மேவெழு மழுவின் வாயால் வேரறக் களைகட் டன்னூர்
தூவெழு குருதி வெள்ளத் துறையிடை முறையி னெங்தைக்
காவன கடன்க ணேர்ந்தே னருஞ்சின மடங்கிப் போந்தேன்.

உலகெலா முனிவர்க் கீந்தேன்
உறுபகை யொடுக்கிப் போந்தேன்
அலகில்மா தவங்கள் செய்தேன்
னருவரை யிருந்தே னுண்டைச்
சிலையைநீ யிறுத்த வோசை
செவியுறச் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை யாகில்
வாங்கிடித் தனுவை யென்றான்.

இருபத்தோர்தரம் க்ஷத்திரியரைக்கொன்று அவர்களுடை ் இரததவெள்ளத்தால் எனது தந்தையின் கடன்கழித்து நான்

ஜயித்த உலகத்தை முனிவர்களுக்குக்கொடுத்து மயேந்திரகிரியில் வசிக்கையில், நீ மிதிலையில் வளைத்து ஒடித்த வில்லின் ஓசையைக்கேட்டு இதோவந்தேன். நீ இப்போது என்னிடத்தில் போர் புரியவேண்டும்; அப்படிச்செய்யச் சம்மதிக்காவிடில் நாரணனால் என் மூதாதைக்குக் கொடுக்கப்பட்ட இந்த வில்லை வளை பார்ப்போம். முன் சொத்தைவில்லை வளைத்து பராக்கிரமசாலியென்று மதிப்புற்றாய்; இப்போது இந்த வில்லை வளைப்பாயாகில் என்னோடு எதிர்த்து ஜயித்ததற்குச் சமானமாகுமென்றான். அவன் இஷ்டப்பிரகாரம் ஸ்ரீராமர் அவ்வில்லைவாங்கி வளைத்துச்சொல்லுவார்.

"பூதலத் தரசை யெல்லாம் பொன்றுவித் தனையென் றாலும்
வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம் பூண்டாய்
ஆதலிற் கொல்ல லாகா தம்பிது பிழைப்ப தன்றால்
யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவி னென்றான்." (36)

பூலோகத்திலுள்ள அரசரையெல்லாங் கொன்றுவிட்டேனென்று நீ இறுமாந்திருந்தபோதிலும் நீ சடைமுடி தரித்த பிராமணனாதலால் உன்னைக்கொல்வது தகுதியல்ல; ஆகிலும் நான் இப்போது தொடுத்துள்ள அம்பானது பிழைபடத்தக்கதுமன்று; ஆதலால் இதற்கு ஒரு இலக்கு சீக்கிரத்தில் காட்டென்றனர்.

எய்தவம் பிடைபழு தெய்தி டாமலென்
செய்தவம் யாவையுஞ் சிதைக்க வேயென
கையவ ணெகிழ்தலுங் கணையுஞ் சென்றவன்
மையறு தவமெலாம் வாரி மீண்டதே. (39)

அந்த அம்பிற்குப் பரசுராமன் தன் தவத்தையெல்லாம் கொடுக்க அது அதைவாரித் திரும்பிற்று; பின்னர் பரசுராமன் வலிகுன்றி ஸ்ரீராமரைத்தொழுது தன்னிடம் சென்றான்.

சந்தனு கங்கையைச்சேர்ந்து பெற்றமைந்தன் காங்கேயன். காங்கேயன் பரசுராமனிடஞ் வில்வித்தை முதலிய பல கலைகளையுங் கற்றான்.

தமிழ்ப்பாரதம் ஆதிபருவம் சந்தனுசருக்கம். 55-வது கவி.

வேந்தகே ளிவனுன் மதலையே தேவ
விரதனென் றிவன்பெயர் பல்லோ
ராய்ந்தநூல் வெள்ளங் கடந்தனன் கரைகண்
டருந்ததி பதிதிரு வருளாற்
பூந்துழாய் மாலைப் போர்மழுப் படையோன்
பொன்னடி பொலிவுற வணங்கி
யேந்துநீள் சிலையும் பலகணை மறையு
மேனைய படைகளும் பயின்றான்.

இதன் பின்னர் பீஷ்மன் காசிராஜன் குமாரத்திகளாகிய அம்பை, அம்பிகை, அம்பாலிகை ஆகிய மூவரையும் தனது தந்தைக்குப் பரிமளகெந்தியாலுதித்த தனது தம்பியாகிய சித்திரவீரியனுக்கு மணஞ்செய்யக் கொண்டுவருகையில், அம்பை சாளுவராஜனை நாயகனாக மனதிற் கொண்டிருப்பதனால் வேறொருவனைக் கலியாணஞ்செய்தல் தகுதியன்றென மறுக்க, அவளைச் சாளுவராஜனிடம் அனுப்பிவிட்டு மற்ற இருவரையும் தன் தம்பிக்குக் கலியாணஞ் செய்வித்தனன். வேறொரு இராஜனால் கவரப்பட்ட கன்னிகையை மணஞ்செய்தல் நீதி விரோதமாகையால் அவ்வம்பையைக் கலியாணஞ் செய்யேனென்று சாளுவராஜன் மறுத்தான். பின்னர் பீஷ்மனை அவள்வேண்ட அவரும் கலியாணஞ்செய்யேன் என்று மறுக்கவே, இந்த விஷயத்தைத் தனது தந்தையிடம்போய்ச்சொல்ல, அவன் பரசுராமனிடம் பீஷ்மன் பல வித்தைகள் கற்றதனால் அவன்சொல்லைத் தட்டாது உன்னை விவாகம் புரிவான்; ஆதலால் நீ பரசுராமனிடஞ் சொல்லென்றனன். அவ்வாறே அவள் பரசுராமனைக்கண்டு வணங்கித் தன்னை பீஷ்மனுக்கு மணஞ்செய்விக்க வேண்டினாள். பரசுராமன் அம்பையின் இஷ்டப்பிரகாரம் காங்கேயனிருப்பிடஞ்சென்று அம்பையை விவாகம்புரியக்கேட்டான். அதற்கு பீஷ்மன் தன் தந்தைக்கு 'நான் கலியாணஞ்செய்துகொள்ளே' னென்று சொன்ன உறுதிமொழியால் இசையாதாகினான். பின்னர் பரசுராமன் காங்கேயனைப்பார்த்து நீ குருவார்த்தையைத் தடுத்தபடியால் நீ என்னோடு அமர் செய்யவேண்டுமென்றனன். இதற்குக் காங்கேயன் முன் தந்தைக்குச்சொன்னசொல் தப்புவதைப்பார்க்கிலும் ஆசாரியன் கையால் மடிவதே யுத்தமமென்று தேர்மீதேறி யுத்தத்திற் காரம்பித்தான். க்ஷத்திரியரையெல்லாம் ஜயங்கொண்டதாயும் அவர்களை வேர்களைந்ததாயும் வீணெண்ணங்கொண்டு கர்வித்திருந்த பரசுராமனும் கங்கைமைந்தனும் இரவு பகல் பத்துநாளாக வெம்போர் புரிந்தார்கள். கடைசியாக பரசுராமன் இந்த க்ஷத்திரியன்முன்னும் எதிர்க்க வலியற்றுத் தோல்வியுற்று மகேந்திர பர்வதம் சேர்ந்தான். அம்பை பீஷ்மனைக்கொல்லத் தவத்திற்கு வனஞ் சென்றனள்.

ஷை பாரதம் சந்தனுசருக்கம்.

இவ்வி ராமனு மறுத்த மன்னவனு மைமி ரண்டுதின மிகலுடன்
வெவ்வி ராவுமொழி யாது வெஞ்சமர் விளைத்த காலையடல் வீடுமன்
கைவி ராயசிலை யோடு மெய்வலி கவர்ந்து முன்றளர்வு கண்டுபோ
ரவ்வி ராமனிக ரென்னு மாறிவனை யஞ்சி நின்றெதி ரடர்க்கவே.

ஓடி மீளமழு மேவு பாணிதன தூர்பு குந்தன னுவந்துபல
கோடி தேரரசர் துதியெ டுக்கநதி குமர னும்தனகர் குறுகினு

ஞுடி மாலையிட வந்த காசிபதி நல்கு மொல்குமிடை நவ்வியும்
வாடி வாடியினியமையு மென்றுதவ வனமடைந்தனண்மடங்கியே.

தோற்றோடிப்போன பரசுராமன் இனி க்ஷத்திரியருக்கு வில் வித்தைக் கற்பிக்கக்கூடாதென்று சபதஞ் செய்துகொண்டான். இப்படியிருந்தும் கர்னன் பரசுராமனுடைய கார்முகச் சாமர்த்தியத்தைக்கேட்டு அவனிடஞ்சென்று தான் பிராமணனென்றுசொல்லி அவனுக்கு வேண்டிய பற்பல உபசார சிஷ்யத்துவங்கள் செய்யவே அவன் மனமிரங்கி அவனுக்கு வில்வித்தைக் கற்பித்தான். பின்னர் ஒருநாள் பரசுராமன் கர்னன் துடைமீது தலைவைத்து துயில்கொண்டிருக்குமளவில் ஓர்வண்டு கர்னன் துடையைத் துளைத்தது. துளைக்கவே அவன் துடையினின்று பெருகும் செந்நீர் பரசுராமனை விழிக்கச்செய்தது. பரசுராமன் விழித்துக் கர்னனை நோக்கி உன்னிடமிருந்து பெருகும் இரத்தத்தைக்கண்டு சகித்துக்கொண்டிருக்கும் நீ க்ஷத்திரியன். நீ யென்னிடம் பிராமணனெனப் பொய்யுரைத்து என் வித்தையைக் கவர்ந்தாயாதலால் இவ்வித்தை உனக்கு சமர்க்களத்தி லுதவாதாகக் கடவதென்று சபித்தான்.

கன்னபர்வம் பதினேழாம்போர்ச்சருக்கம். 120-வது கவி.

வேதியற் கல்லது விளம்பொணு வயன்
போதியற் கணைநினைக் களித்த புன்மையா
னேதலுற் றதுதனக் குனக்கு மிக்கணை
பூதலத் தமர்த்தலை பொய்க்க வென்றனன்.

வியாச மஹாபாரதம் ஆதிபருவம் 131-வது அத்தியாயம்.

துரோணன் ஒருகாலத்தில் பரசுராமனுடைய பராக்கிரமத்தைக்கேட்டு அவனிடமுள்ள வாளியெய்யும் வித்தையைக் கற்றுக்கொள்ள மயேந்திரபர்வதஞ்சென்று அவனை வணங்கி நான் பிராமணகுலத்திற் பிறந்த பரத்துவாஜன் மைந்தன்; என்பேர் துரோணன். எனக்கு உன்னிடமுள்ள ஐஸ்வரியத்தைக்கொடுக்க வேண்டுகிறேனென்றனன். அதற்கு அவன் எனது ஐஸ்வரியம் யாவும் பிராமணர்களுக்குத் தத்தஞ்செய்துவிட்டேன். கடற்கரையோரத்திலுள்ள இந்த பூமியையும் அதிலுள்ள பட்டணங்களையும் காசிபரிஷிக்குக் கொடுத்துவிட்டேன். இப்போது என்னிடசரீரமும் அம்புகளும் தவிர வேறொன்றும் என்னிடமில்லை. இவற்றில் உனக்கு எதுவேண்டுமோ அதைக்கேள் என்றனன். இதைக்கேட்ட துரோணன், ஓ பிருகுகுலசிகாமணியே! நீர் உமது பாணங்களைக் கொடுப்பதன்றி அவற்றையெய்து வரவழைக்கும் மார்க்கங்களைக் கற்பிக்கவேண்டுகிறேனென்றனன். பரசுராமன் அவ்வாறே சந்தோஷத்தோடு தனது பாணத்தைக்கொடுத்து அவற்றையுபயோ

ன் றுரைப்பாராயின்கலியுகம் பிறந்த முப்பத்தாறுவது வருஷத்தில் பாண்டவர்கள் பரமபதஞ்சென்றார்களென்றும் அவர்கள் சந்ததியில் பரிட்சித்தும் ஜனமேஜயனும் அவர் சந்ததியாரும் ஆண்டதாக மஹாபாரதமும் விளக்குகின்றது. மேலும் தென்தேசத்திலுள்ள சேரசோழபாண்டியர்கள் மேற்படி பாரதயுத்தத்தில் போர்புரிந்ததாகவும் பாண்டியன் குமாரத்தியாகிய சித்திராங்கதையை அருச்சுனன் கலியாணஞ் செய்ததாகவும் மேற்படி பாரதமே புகலுகின்றது. மேலும் அக்கினிகுலத்தில் உதித்த கேரளாதிபதியாகிய குலசேகரப்பெருமாள் கலியுகம் பிறந்த 1860 - வது வருஷத்தில் பிறந்தார். இவர் தந்தையின்பேர் க்ஷத்திரிய திருடவிருத மஹாராஜா. இவர் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். இவர் க்ஷத்திரியரன்றோ? இவரை க்ஷத்திரியரென்று சொல்லாத வைணவப் பிராமணருமுண்டோ?

அல்லி மாமலர் மங்கை நாதன ரங்கன் மெய்யடி யார்கள்தம்
எல்லை யாலடி மைத்தி றத்தினி லென்று மேவு மனத்தனும்
கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக் கோன்குல சேகரன்
சொல்லின் றமிழ்மாலைவல்லவர்தொண்டர்தொண்டர்களாவரே.

இக்கவியால் குலசேகரப்பெருமாள் சேரநாட்டை யாண்ட க்ஷத்திரியனென அறியலாம். இங்ஙனமிருக்கக் கலியுகத்தில் க்ஷத்திரியரில்லையென்று எப்படி யுரைக்கலாம்? அன்றியும், சைவத்தில் முத்தியடைந்த க்ஷத்திரியர்களில் முடிமன்னர் அறுவரென்றும், குறுநிலமன்னர் ஐவரென்றும், திருத்தொண்டர் புராணவரலாறு 26-வது கவி கூறுகின்றது.

திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே
 தியரானை வழிப்பட்ட புராணமீ ரிரண்டு
குரைகழன்மா மாத்திரரொன் றறுவர்முடி மன்னர்
 குறுநிலமன் னரைவர் வணிகர்குலத் தைவர்
இருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடைய
 ரிருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர்
பரதவர்சான் றார்வண்ணார் சிலைமறவர் நீசர்
 பாணரிவ ரோரொருவ ராம்பகருங் காலே.

—மேற்கூறிய அரசர் கலியுகத்திலிருந்த க்ஷத்திரியர்களல்லவோ? இவர்களை க்ஷத்திரியர்களென்று சொல்லாத சைவருமுண்டோ?

திருமங்கையாழ்வார் பாசுரம்.

சொல்லுவன் சொற்பொரு டானவையாய்ச்
 சுவையூறொளி நாற்றமும் தோற்றமுமாய்
நல்லரன் நாரணன் நான்முகன் கிடந்தான்
 தடஞ் சூழ்ந் தழகாய்க் கச்சிப்

பல்லவன் வில்லவ னென் றுலகில்
பலராய்ப் பலவேந்தர் வணங் குகழற்
பல்லவன் வில்லவ னென் றுலகில்
பரமேச்சுர விண்ணகர மிதுவே.

என்று கூறிய பாசுரத்தில் கலியுகத்தில் காஞ்சியையாண்ட பல்லவமஹாராஜன் க்ஷத்திரியனல்லவோ? இம்மட்டோ,

பெரியபுராணம்.

கழற்சிங்கநாயனர் சரித்திரம். க-கவி.

படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதின் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமல ரன்றி வேறென் றறிவினுட் குறியா நீர்மைக்
கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்க ரென்பார்.

ஷ புராணம் ஐயடிகள் நாயனர் சரித்திரம். க-கவி.

வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையு மிகையொழுகும் வகையடைக்கிச்
செய்யசடை யவர்சைவத் திருநெறியா லரசளிப்பார்
ஐயடிக ணீதியா லடிப்படுத்துஞ் செங்கோலார்.

சுந்தரமூர்த்திநாயனர் தேவாரப்பதிகம்.

கோயிற்பத்து. ச-வது கவி.

சிதம்பரத்திலருளிச்செய்தது.

கருமையாற் றருமனர் தமர்நன்மைக்
கட்டிய கட்டறுப் பிப்பானை
யருமையாந் தன்னுலகந் தருவானை
மண்ணுலகங் காவல்பூண்ட
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கச் செய்யும்
பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்று மன்றே.

இக்கவிகளால் பல்லவராஜர்கள் பூமண்டலத்தை யாள்பவர்களென்றும், அவர்களுக்குப் பிரதான நகரம் ஸ்ரீகாஞ்சீபுரம்மென்றும் தெற்றன விளங்குகின்றது.

இத்தியாதி நியாயங்களால் பரசுராமன் க்ஷத்திரியர்களை நிர்மூலஞ்செய்தான் என்னுஞ்சொல் வெற்றுரையென அறிஞர் அறிவார்.